1993 மார்ச் 16]

வருகின்ற நிதி ஆண்டிலாவது கருணை உள்ளத்தோடு அங்கே மேல்நிலைப் பள்ளியை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே பதில் சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 85,* திரு. ஆர். சிங்காரம், *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.*

85-

அரசு மருத்துவமனைகளில் குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் தாய்மார்களுக்கு அடையாள அட்டை வழங்குதல்.

** 13823*–**திரு. ஆர். சிங்காரம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா–

அரசு மருத்துவனைகளில் குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் தாய்மார்களுக்கு அடையாள அட்டை வழங்கி சிகிச்சை அளிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இத்திட்டம் 1985-86 முதல் வழங்கப்பட்டு வந்தது. இத்திட்டம் 1991-92-ம் ஆண்டு முதல் நிறுத்தப்பட்டுவந்தது. தற்பொழுது அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளும் தாய்மார்களுக்கு மாவட்ட அளவில் தங்கக் காசுகள் வழங்கும் பரிசுத்திட்டம் மாநில அரசால் கொண்டுவரப்பட்டு நடைமுறையில் உள்ளது.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டம் கைவிடப்பட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின் வாயிலாக குடும்பக் கட்டுப்பாடு ஆப்பரேஷன் செய்யப்பட்ட தாய்மார்களுக்கு இதன் விளைவாக ஒரு சில தாய்மார்களுக்கு சைடு எபக்ட்டினால் பாதிக்கப்பட்டவர்கள் மீண்டும் சிகிச்சை செய்கின்றபோது அவர்களுக்கு அந்த உரிமை வழங்கப்படுவது இல்லை. மேலும் நிரந்தரமாக

[1993 மார்ச் 16

அவர்களுக்கு அடையாள அட்டை இருக்குமானால் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்கின்றவர்களுக்கு மற்ற ஏனைய எந்த வியாதி வந்தாலும் அதை உடனடியாக கவனிக்கின்ற ஒரு நல்ல சலுகை கிடைக்கும் என்ற நல்ல நோக்கத்தோடு அந்த அடிப்படையில் அந்த கார்டு அவர்களுக்குப் பயன்படும். ஆகவே, அவசர நிமித்தம் அந்த வியாதியஸ்தர்களுக்கு அது பயன்படும் என்ற நல்ல எண்ணம் இந்த நாட்டு மக்களுக்கு ஏற்பட்டு இருக்கின்ற காரணத்தால் குடும்பக் கட்டுப்பாட்டை மேலும் செய்து கொள்வதற்கு ஊக்கம் பெறுவதற்கு நிறைய வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால் இதை மீண்டும் பரிசீலித்து அடையாள அட்டை வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது *1985* ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. ஆனால் துவக்கப்பட்டதிலிருந்து நடைமுறையில் முழுமையாக அது பயன்படுத்தப்படவில்லை. ஏறத்தாழ 30 லட்சம் ரூபாய்க்கும் கார்டு அடித்து வைத்து இருக்கிறோமே ஒழிய அது யாருக்கும் வினியோகிக்கப்படவில்லை; வினியோகிக்கப்பட்ட இடத்திலும் அதைக் கொண்டு வந்து யாரும் காட்டுவது இல்லை; அதை, கையில் அவர்கள் வைத்துக்கொள்ளுவதும் இல்லை. எனவே அது முழுமையாக பயன்படுத்தப்படவில்லை என்று கருதிய காரணத்தால்தான் அந்தத் திட்டத்தை மாற்றி இப்போது அவர்களுக்கு பரிசுத் திட்டமாக நாம் இதிலே அறிமுகப்படுத்தியிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல. இப்போது மருத்துவமனையில் யார் அறுவைச் சிகிச்சை செய்து கொள்கிறார்களோ அவர்கள் சம்பந்தப்பட்ட ரெக்கார்டு அங்கே வைக்கப்பட்டிருக்கின்றது. எனவே, அந்த ரெக்கார்டுகளின் படி அந்த மருத்துவமனைக்கு அவர்கள் வந்தால் அதிலே எல்லா டீடெயில்களும் இருக்கும். அதை எடுத்துப் பார்க்கிற வசதியும் இருக்கிறது. எனவே அது வெற்றி பெறவில்லை. பொதுமக்கள் அதற்கு முழுமையாக ஒத்துழைப்பு தரவில்லை. அதிலே போட்டோ ஒட்ட வேண்டும், அதை ஒட்டுவதற்கு அவர்களைக் கேட்டால் எடுத்துக் கொடுப்பது இல்லை. இப்படிப்பட்ட பல சங்கடங்களினால் கடந்த காலங்களில் இது அமல்படுத்தப்படவில்லை. ரெக்கார்டுகளிலே இருந்ததே ஒழிய அது நடைமுறையில் இல்லை. இப்போது அதை மாற்றி நாம் புதிய திட்டத்தை அறிமுகம் செய்திருக்கிறோம்.

1993 மார்ச் 16]

முற்பகல் 10.20

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்ற பொழுது, ஆஸ்பத்திரியிலேயே ரெக்கார்ட் வைத்திருக்கிறோம், அதைப் பார்த்து நாங்கள் வைத்தியம் செய்கின்றோம் என்று சொன்னார்கள். அது நடைமுறைக்குச் சாத்தியப்படவில்லை. நோயாளிகள் அங்கே சென்று சொல்கின்றபொழுது, அதைப்பற்றியெல்லாம் இப்பொழுது கவலையில்லை, நீ வேறு விஷயத்துக்கு வா என்று டாக்டர்கள் சொல்லுகின்றார்கள். ஆகவே, ஐடென்டிபிகேஷன் கார்டு இருக்குமேயானால் உடனடியாக வைத்தியத்தைச் செய்யவேண்டுமென்ற உத்தரவையும் அரசு பிறப்பிக்கவேண்டும். ஐடென்டிபிகேஷன் கார்டை தொலைத்து விடுவார்கள் என்று சொன்னால் பாமர மக்கள். . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளக்கம் சொல்லவேண்டும் இல்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே விளக்கம் அதிகமாகச் சொல்லி விட்டீர்கள்.

திரு. ஆர். சிங்காரம்: பாமர மக்கள் அதைப் பயன்படுத்தத் தெரியாமல் இருக்கலாம். படிக்காதவர்கள், கிராமத்திலே வாழுகின்ற சாதாரண ஏழையெளிய மக்கள். அந்த மக்களுக்கு அந்தப் பயிற்சியையும் கொடுத்து அவர்களுக்கு அந்த விஷயத்தையும் எடுத்துச் சொல்லி, நீங்கள் கார்டை வைத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லி, அந்தக் கார்டை அவர்களுக்குக் கொடுப்பது மிக மிக அவசியம் என்று கருதுகின்ற காரணத்தினால் அதை மீண்டும் மீண்டும் பரிசீலிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவமனைகளிலே டாக்டர்கள் வேறு விஷயம் ஒன்றும் சொல்வதில்லை. (சிரிப்பு) அவர்கள் சிகிச்சை மட்டுந்தான் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். எனவே, இந்த அட்டையைப் பொறுத்தவரையில் நான்தான் ஏற்கெனவே சொன்னேன். நடைமுறையிலே இருந்ததாக ரெக்கார்டிலே இருக்கிறதேயொழிய

உண்மையிலேயே அது பயன்படுத்தப்படவில்லை. எல்லோருக்கும் வினியோகித்து இருக்கிறார்கள். வினியோகிக்கப்பட்டவர்கள் யாரும் அதைத் திருப்பிக் கொண்டு வரவும் இல்லை. அதற்குப் பின்னாலே அப்படி ஒன்று இருப்பதாகவே யாரும் சொல்லவில்லை. எனவே, இதற்காக ஆண்டுதோறும் 30 இலட்சம் ரூபாயை வீணடிக்க வேண்டுமா என்று கருதித்தான் அவர்களுக்காவே ஒரு புதிய திட்டத்தை நாம் உருவாக்கிக் கொடுத்திருக்கிறோம். இது நடைமுறையிலே சாத்தியமாக இல்லை. பொதுமக்களுக்கு இதற்கு ஒரு டிரெயினிங் என்று சொன்னால் அதற்குத் தனியாக செலவு செய்ய வேண்டியிருக்கும். எனவே, அவர்கள் வந்து சொன்னாலே மருத்துவமனைகளிலே அந்த வசதியைச் செய்து கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கலாமேயொழிய, இது பயனுடையதாக இல்லை. முழுமையாக அதைப் பயன்படுத்தவில்லை. பொதுமக்கள் அதற்கு ஒத்துழைப்பையும் சரியாகத் தரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் பிட்ரிக்ஸ் டி' சோசா.

DR. BEATRIX D' SOUZA : Honourable Speaker Sir, I strongly feel that the responsibility for family planning should not rest with the women. Will the Government consider incentives for men to undergo sterilization so that they can also get identification certificate?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஆண்களுக்கும் அறுவைச் சிகிச்சை செய்யப்படுகிறது. இது ஐடென்டிபிகேஷன் கார்டு கொடுக்கிற திட்டமேயொழிய அதனுடைய முறைகளைப் பற்றி நாம் இப்பொழுது பேசவில்லை. எனவே. அதைப்பற்றி தனியாகக் கேள்வி போட்டால் அதற்கு விளக்கமாக, ஏன் ஆண்களுக்கு செய்வதைவிட பெண்களுக்குச் செய்வது வசதி என்பதைப் பற்றியெல்லாம் சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நபர் ஆஸ்பத்திரியிலே அட்மிட் ஆகி, அவரை டிஸ்சார்ஜ் செய்யும்பொழுது அவரிடம் ஒரு பேப்பரிலே ரசீது போன்று எழுதிக் கொடுக்கிறார்கள். அதிலே, இந்த நாளிலே டிஸ்சார்ஜ் பண்ணினோம், இந்த வியாதிக்கு சிகிச்சை அளித்தோம்

1993 மார்ச் 16]

என்று இருக்கும். அப்படிக் கொடுக்கின்ற பேப்பரையே அட்டையாக மாற்றிக் கொடுத்து விட்டால் அரசாங்கத்துக்கு அவ்வளவு செலவு இருக்காது. ஆகவே, அப்படிச் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கிற நிதிப் பிரச்சினையில் ஒவ்வொன்றும் செலவுதான். பேப்பராக இருப்பதை அட்டையாக மாற்றுகிறபொழுது அதற்கு இரண்டு மடங்கு செலவாகும். இப்பொழுது கொடுக்கிற பேப்பரையே அடுத்த நாள் கொண்டுவருவது இல்லை. அரசாங்க மருத்துவமனைகளிலே எங்களுக்கு இருக்கிற சிக்கலே ஒரு மருத்துவர் ஐந்து நிமிடம் அவருக்காக நேரம் செலவழித்து ஓ.பி. சீட் கொடுத்தால் அடுத்த நாள் வருகிறபொழுது அந்த ஓ.பி. சீட்டைக் கொண்டு வருவதில்லை. மீண்டும் புதிதாகப் பார்த்து, கொடுக்கிற நிலை இருக்கிறது. எனவே, அதற்கு என்றைக்கு மக்கள் தயாராகிறார்களோ அன்றைக்கு அவர்களுக்கு புத்தகமாகவே போட்டுக் கொடுத்துவிடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைகளில் பெண்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்த பின்பும் அவர்களுக்குக் குழந்தை பிறக்கிறது. (சிரிப்பு) அப்படி குழந்தை பிறக்கிற பெண்களுக்கு அரசாங்கம் 20 ஆயிரம் ரூபாய், அவர்களைப் பாராட்டிக் கொடுக்க முன் வருமா என அறிய விரும்புகிறேன். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அறுவைச் சிகிச்சைக்குப் பின்னாலே குழந்தை பிறந்தால் அவர்களுக்குப் பாராட்டு தெரிவிக்கப்படுமா என்று கேட்டார்கள். அறுவைச் சிகிச்சைக்குப் பின்னாலே, ஃபெயிலியர் என்ற அந்த ரேட்டிலே ஒரு குறிப்பிட்ட சதவீதம் அனுமதிக்கப் பட்டிருக்கிறது. ஆனால், அப்படி இருப்பவர்களுக்கு நாம் பாராட்டைத் தெரிவிக்க முடியாது. அதற்குரிய நடவடிக்கை எடுத்து மீண்டும் ஜனத்தொகை பெருகாமல் பார்ப்பதற்குத்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ரமணி நல்லதம்பி

[*1993 மார்ச் 16*

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறுவைச் சிகிச்சை செய்து கொள்வதனுடைய நோக்கமே பெருகி வருகின்ற ஜனத்தொகையைக் கட்டுப்படுத்துவதற்காகத்தான். ஆகவே, இப்படி ஒரு அட்டையை வழங்குவதன் மூலமாக, அந்த அட்டையை வைத்திருக்கின்றவர்களுக்கு அரசாங்கத்திலே, வேலைவாய்ப்பிலே முன்னுரிமை, இப்படி பல்வேறு சலுகைகளில் அவர்களுக்கு வாய்ப்பு அளித்தால் அவர்களை ஊக்குவிப்பதற்கு அது உதவியாக இருக்கும் என்ற காரணத்தினாலே நிச்சயமாக அந்த அட்டையை வழங்குவது லாபமாகத்தான் இருக்குமேயொழிய நஷ்டமாக இருக்க முடியாது. ஆகவே, அதை மீண்டும் பரிசீலனை செய்து இத்தகைய சலுகைகளையும் அதன் மூலமாக வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10.25*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே அறுவைச் சிகிச்சை செய்வதற்கு வருகின்ற தாய்மார்களுக்குப் பல்வேறு சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. சலுகைகள் பின்னாலே கிடைக்கும் என்று சொன்னால் அவர்கள் அவ்வளவு ஆர்வமாக வருவது இல்லை. கை மேலே என்ன கிடைக்கிறது என்பதைப் பார்த்துத்தான் அவர்கள் அதிலே ஆர்வம் காட்டுகிறார்கள். எனவேதான் பணமாக அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. இப்பொழுது தங்கக் காசு பரிசுத் திட்டமெல்லாம் வைத்திருக்கிறோம். எனவே, இந்தக் கார்டே அந்த நோக்கத்திலேதான் கொடுக்கப்பட்டது. ஆனால் அந்தக் கார்டையேகூட அவர்கள் வைத்துக் கொள்ளவில்லை: வீணாகப் போனது என்ற காரணத்தால்தான் அந்தத் திட்டத்தையே இப்பொழுது மாற்றியிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. வேலையா.

திரு. டி. வேலையா: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் கூறுகிறபொழுது, குடும்ப அறுவைச் சிகிச்சை செய்த பிறகும்கூட ஒரு குறைந்த சதவீதம் திரும்பக் குழந்தை பிறக்கிறது என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறுகிற காரணத்தால், இப்பொழுதெல்லாம், நுகர்வோர் கோர்ட்டுகளில் அதிகமாக வழக்குகள் வருகின்றன. அரசாங்கத்திலே வேலை பார்க்கிற டாக்டர்கள் மீது வழக்குகள் போடுகிறார்கள். இப்படி அறுவைச் சிகிச்சை செய்தாலும்கூட பிறகு

1993 மார்ச் 16]

குழந்தை பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பது விஞ்ஞான பூர்வமாக உறிதியாக இருந்தால், அப்படிப்பட்ட மருத்துவர்களை நீதிமன்ற வழக்குகளிலிருந்து காப்பாற்றுவதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் சொன்னது, ஏற்கனவே மத்திய அரசும் சேர்ந்து, இதிலே ஒரு சதவீதத்தை அனுமதித்திருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட அளவு சதவீதம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவிற்கு ஃபெய்லியர் ஏற்பட்டால் அதிலே தவறு இல்லை என்று சொல்லி அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தத் தவறு செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் எண்ணிக்கை கூடிவிடும்.; அந்த பர்செண்டேஜ் கூடிவிடும். எனவே, நடவடிக்கை எடுக்கத்தான் வேண்டியிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 86, திரு. மா.சா.மா. இராமச்சந்திரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

86 --

சென்னை நகரில் நெரிசல் நேரங்களில் இருக்கை இல்லாத பேருந்து விடல்.

* *9744*-திரு. மா.சா.மா. **இராமச்சந்திரன்** :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா-

சென்னை நகரில் நெரிசல் நேரங்களில் அதிகம்பேர் பயணம் செய்யும் வகையில் பயணிகள் இருக்கை இல்லாத பேருந்துகள் விடப்படுமா ?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. மா.சா.மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, "பீக் அவர்ஸ்" என்று அழைக்கப்படுகின்ற அந்த நெரிசல்மிக்க நேரங்களில் பேருந்துகளிலே அளவுக்கு அதிகமான